# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு மரக்காணத்திலும் – கடலூரிலும் கழகத்தினர் எழுச்சிமிகு வரவேற்பு!







கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.06.2026), புதுச்சேரி மற்றும் திருவாரூரில் கழகத் தோழர்கள் இல்ல மணவிழாக்களில் பங்கேற்றிட சென்ற போது, மரக்காணத்திலும், கடலூரிலும் கழகத்தினர், பொதுமக்கள் ஏராளமானோர் வழிநெடுகிலும் திரண்டு வரவேற்பளித்தனர்.

### தி.மு.க. விவசாய அணி மாநில துணைச் செயலாளர் அரியப்பன் புதல்வர் –

## தி.மு.க. GenZ நிர்வாகி அன்பானந்தம் வீட்டை முற்றுகையிட்ட போலீசார்!

### முதலமைச்சர் ஜோசப் விஜய்யை விமர்சித்ததாகக் கூறி விசாரணை!

கிருஷ்ணகிரி, ஜூன் 26 -

முதல்வர் விஜய் மற்றும் நடிகை த்ரிஷா ஆகியோரின் பிறந்தநாள் கொண்டாட்டம் குறித்து சமூக வலைதளத்தில் விமர்சித்து வீடியோ வெளியிட்ட தி.மு.க. ‘GENZ’ நிர்வாகியின் வீட்டிற்குள் நள்ளிரவில் காவல்துறை புகுந்து தேடலில் ஈடுபட்ட சம்பவம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பொய் வழக்குப்பதிவு செய்தால் ராயக்கோட்டையில் பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என திமுக சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

**நள்ளிரவில் போலீஸ் முற்றுகை – நடந்தது என்ன?**

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராயக்கோட்டை அருகே உள்ள போடம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் தி.மு.க. விவசாய அணியின் மாநில துணைச் செயலாளர் அரியப்பன். இவரது இளைய மகன் அன்பானந்தம், திமுகவின் ‘GEN Z’ ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராக உள்ளார். சமூக வலைதளங்களில் எப்போதும் சுறு சுறுப்பாக இயங்கி வரும் இவர், நேற்று முதல்வர் விஜய், நடிகை த்ரிஷாவுடன் பிறந்தநாள் கொண்டாடியது குறித்து விமர்சித்து சமூக வலைதள பக்கத்தில் வீடியோ ஒன்றை பதிவிட்டிருந்தார்.



இந்த நிலையில், நேற்று நள்ளிரவு சுமார் 12:30 மணியளவில் தேன்கனிக்கோட்டை டிஎஸ்பி ஆனந்தராஜ் தலைமையில், காவல் ஆய்வாளர் சசிகலா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட போலீசார் திடீரென அரியப்பனின் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் அன்பானந்தத்தை விசாரணைக்காக அழைத்துச் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளனர்.

**எம்.எல்.ஏ. மற்றும் குடும்பத்தினர் வாக்குவாதம்!**

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அன்பானந்தத்தின் தந்தை அரியப்பன், தாய் மற்றும் சகோதரர்கள், “எந்தவித வாரண்ட்டும் இல்லாமல் நள்ளிரவில் வந்து கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன?” என்று போலீசாரிடம் காரசாரமாகக் கேள்வி எழுப்பினர். அதற்கு போலீசார், “விசாரணைக்காகத்தான் அழைக்கிறோம், அவரை வெளியே அனுப்புங்கள்” எனக் கேட்டுள்ளனர். ஆனால், அன்பானந்தம் பெங்களூருவில் பணி புரிந்து வருவதால் அவர் வீட்டில் இல்லை என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் வீட்டை சோதனை செய்ய வேண்டும் என போலீசார் பிடிவாதம் பிடித்தனர். தகவலறிந்து வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினரும், தி.மு.க. மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான பி. சீனிவாசன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தார். போலீசாரிடம், “அன்பானந்தம் மீது என்ன வழக்குப் போடப்பட்டுள்ளது? யார் புகார் கொடுத்தது?” என்று அவர் கேள்வி எழுப்பினார். ஆனால், அதற்கு உரிய விளக்கமளிக்காத போலீசார், வீட்டின் உள்ளே புகுந்து சோதனையிட்டனர். அங்கு அன்பானந்தம் இல்லாததை உறுதி செய்துகொண்ட பின்னர் போலீசார் அங்கிருந்து கிளம்பிச் சென்றனர்.

“முதல்வரை விமர்சனம் செய்து வீடியோ வெளியிட்ட ஒரே காரணத்திற்காக, நள்ளிரவில் அடியாட்களைப் போல வந்து போலீசார் என் மகனை கைது செய்ய முயற்சி செய்துள்ளனர்” என அன்பானந்தத்தின் குடும்பத்தினர் கண்ணீருடன் குற்றம் சாட்டியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்த கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான பிரகாஷ், மாநில இளைஞரணி துணை செயலாளர் வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஒன்றிய செயலாளர் சின்ராஜ் உள்ளிட்ட திமுக முக்கிய நிர்வாகிகள் ராயக்கோட்டை காவல் நிலையத்திற்கு நேரடியாகச் சென்றனர்.

காவல்துறையினரிடம், “அன்பானந்தம் மீது என்ன வழக்கு உள்ளது? ஏன் நள்ளிரவில் அவர் இல்லத்திற்குச் சென்று தேடினீர்கள்?” என்று முறையிட்டனர்.

**தி.மு.க. எச்சரிக்கை: “பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம்”**

செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. நிர்வாகிகள், “அரசியல் ரீதியான விமர்சனங்களுக்கு சகிப்புத் தன்மையின்றி காவல்துறை மூலம் மிரட்டல் விடுப்பது கண்டிக்கத்தக்கது. அன்பானந்தம் மீது அரசியல் பழி வாங்கும் நோக்கில் பொய் வழக்கு ஏதேனும் போடப்பட்டால், கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனையின்படி, ராயக்கோட்டையில் ஒட்டுமொத்த பொது மக்களையும், தொண்டர்களையும் திரட்டி மிகப் பெரிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்” என எச்சரித்துள்ளனர்.

இந்த நள்ளிரவு போலீஸ் சோதனைச் சம்பவம் வேப்பனஹள்ளி மற்றும் ராயக்கோட்டை பகுதியில் பெரும் பதற்றத்தையும், அரசியல் வட்டாரத்தில் பரப்பரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.06.2026) புதுச்சேரியில் நடைபெற்ற திரைப்பட இயக்குநர் வ.கௌதமன் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு, மணமக்கள் கௌ.பரஞ்ஜோதி – க.குணாநிதி ஆகியோரை வாழ்த்தினார்.




கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராயக்கோட்டை அருகே உள்ள போடம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் தி.மு.க. விவசாய அணியின் மாநில துணைச் செயலாளர் அரியப்பன். இவரது இளைய மகன் அன்பானந்தம், தி.மு.க.வின் ‘GEN Z’ ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராக உள்ளார். முதல்வரை வலைதளத்தில் விமர்சித்ததால் நள்ளிரவில் அவரது வீட்டை முற்றுகையிட்டது. காவல்துறை தகவலறிந்த கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான பிரகாஷ், மாநில இளைஞரணி துணை செயலாளர் வேப்பனஹள்ளி சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஒன்றிய செயலாளர் சின்ராஜ் உள்ளிட்ட கழகத்தினர் காவல் நிலையத்தில் முற்றுகையிட்டனர்.